# பொதுக்காலம் 30ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 30ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், பரிசேயன், "நான் இந்த வரிதண்டுபவரைப்போல் இல்லாதது குறித்து உமக்கு நன்றி கூறுகிறேன்" என்று கூறுவதன் வழியாக, ஆயக்காரனை தவறான, கீழ்நிலையிலுள்ள ஒரு நபராக அவரை தீர்ப்பிடுகின்றார். இறைவன் கவனம் ஆயக்காரன் மீது செல்லாமல் தம் பக்கம் திசை திருப்பி இறைவனுக்கே கடிவாளமிட நினைத்து, தன்னை இறைவன் முன்னிலையில் நேர்மையாளராக காட்டுகின்றார்.

ஆனால், "நாம் ஒவ்வொருவரும் நம்மைக் குறித்தே கணக்குக் கொடுக்க வேண்டும்" என்ற இறைவார்த்தைக்கேற்ப, நாம் நம் செயல்களை, தவறுகளை, பாவங்களை மட்டுமே உள்ளத்தில் ஆய்ந்தறிய வேண்டுமே ஒழிய, பிறரைத் தவறாக தீர்ப்பிடுதலாகாது. மனிதன் பாதி, மிருகம் பாதியாக வாழும் நாம், நம் தவற்றைக் களைந்தெறியாமல், அடுத்தவர்களை தீர்ப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம். "பிறருக்கு எதிராக தீர்ப்பளிக்கும்போது நீங்கள், உங்களுக்கே தண்டனைத் தீர்ப்பை அளிக்கிறீர்கள்" என்பதை உள்ளத்தில் உள்வாங்கியவர்களாக நம் வாழ்வை சீர்தூக்கிப் பார்த்து, அதில் கவனமுடன் வாழ்ந்திட முன்வர வேண்டும்.

தொடக்கநூலில் ஆதாம், ஏவாள் இருவருமே தங்கள் தவற்றினை, ஏற்றுக் கொள்ளாமல், அடுத்தவர்மீது பழியைச் சுமத்துகின்றனர். தங்கள் தவற்றினை தாழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள முன்வர அவர்கள் மனம் மறுத்து விட்டது. ஆனால், இன்றைய நற்செய்தியில், ஆயக்காரன் தன்னை இறைவன் முன்பாக தாழ்த்திக் கொண்டதால், இறைவனுக்கு ஏற்புடையவனாக வீடு திரும்பினான். ஆம், தன்னை தாழ்த்துவோரின் வேண்டுதல்கள் முகில்களை ஊடுருவிச் செல்லும்" என இறைவார்த்தை மிகத் தெளிவாக சீராக்கின் ஞான நூலில் கூறப்பட்டுள்ளது.

தாழ்ச்சி நிறைந்த செபமே இறைவனால் ஏற்றுகொள்ளப்படும். "தமக்குத் தாமே நற்சான்று கொடுப்பவர் அல்ல, மாறாக, இறைவனிடம் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர்" என்று புனித பவுல் கூறுவது போல, நாமும் நம்மைக் குறித்து, உயர்வு மனப்பான்மை கொள்ளாமல், பெருமை பாராட்டாமல், நமக்கு நாமே நற்சான்று கொடுக்காமல், நம்மைக் குறித்து கணக்கு கொடுக்கக் கூடிய மாந்தர்களாக, உள்ளத்தில்

தாழ்ச்சி நிறைந்தவர்களாக இறைவனிடம் நம்மை முழுமையாக இத்திருப்பலியில் அர்ப்பணிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. "உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" என்ற ஆண்டவரே,

எங்கள் வாயிலிருந்து வரும் சொற்கள், பிறரை ஏளனம் செய்வதாக, அவமானப்படுத்துவதாக, இல்லாதது, பொல்லாதது எல்லாம் கூறுவதாகவே இருக்கின்றன. அதற்காக இவ்வேளையில் மன்னிப்பு கேட்கின்றோம் தெய்வமே, இனியும் நாங்கள் இத்தவற்றினைச் செய்யாமல், எங்கள் வார்த்தைகள் பிறருக்கு வாழ்வளிக்கக் கூடிய விதத்தில், நிம்மதியளிக்கும் விதத்தில், ஊக்கம் தரும் வகையில் அமைந்திட அருள் புரிந்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. "எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக" என்ற ஆண்டவரே,

தாயாம் திருச்சபையை விலகி பிற சபைகளுக்குச் செல்லும் மாந்தர்கள் உண்மைத் தெய்வம் நீரே, நற்கருணையில் என்றும் பிரசன்னமாகி எங்களுக்கும் அருமருந்தாக இருக்கின்றீர் என்பதை அவர்கள் உணர்ந்து, மீண்டுமாக நம் திருச்சபையில் இணைந்திடவும், சாதி, மத, இனவெறியால் சிதறுண்டு கிடக்கும் மாந்தர்களும் நல்ல மாற்றம் பெறவும், இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. "நாளைக்காக கவலைப்படாதீர்கள்" என்ற ஆண்டவரே,

எங்கள் எதிர்காலம் எப்படி இருக்குமோ, எங்கள் பிள்ளைகள் எப்படி வாழ்வார்களோ என்ற கவலை இன்று ஒவ்வொருவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. அதனால், இன்று ஒவ்வொருவரும் நிம்மதியிழந்து, தங்கள் தூக்கத்தையிழந்து உழைத்துக் கொண்டிருக்கின்றனர். தங்கள் உடல்நலனை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் தவறான, குறுக்கு வழிகளை பின்பற்றுகின்றனர். இதையெல்லாம் மாற்றி, நீர் சொன்னதுபோல, "அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்" என்ற மனநிலையைப் பெற்று, எங்கள் வாழ்வில் நிம்மதியுடன் வாழ, வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. "நீங்கள் உலகின் ஒளி" என்ற ஆண்டவரே,

எங்கள் வாழ்வில் பொறாமை, பேராசை, கொலை, களவு, செருக்கு, வஞ்சகம், விபச்சாரம் போன்ற இருளுக்குரிய செயல்களில் உழன்று கொண்டிருக்கின்றோம். இத்தகைய தீச்செயல்களைக் களைந்து, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை

அணிந்து, கிறிஸ்தவர்கள் என்ற பெயர் தாங்கிய நாங்கள், அதை வாழ்ந்து காட்டி, அர்த்தமுள்ளதாக்கிட, உலகிற்க ஒளியாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. “என்னை விட்டுப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய இயலாது” என்ற ஆண்டவரே.

எங்கள் வாழ்வில் வரும் சோதனைகள், துன்பங்கள் வரும்போது எங்கள் விசுவாசத்தை இழந்து, உம்மை விட்டு விலகிச் செல்கின்றோம். குறி கேட்பது, வேற்றுத் தெய்வங்களை தேடிச் செல்வது என உண்மைத் தெய்வமாகிய விட்டுத் தவறிச் சென்றிருக்கின்றோம். ஆனால் அவையெல்லாம் ஒன்றும் செய்ய இயலாதவை என்பதை உணர்ந்து, எங்கள் ஆணவம், அகந்தையிலிருந்து விடுபட்டு, உம்மால் மட்டுமே எல்லாம் இயலும் என்பதை உணர்ந்து, உம்மிடமே எங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும் ஒப்படைத்து வாழ்ந்திடக் கூடிய, உறுதியான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com